1981 பிப்ரவரி 4]

ஆரணி குடிநீர் திட்டம்

*வினா எண். 172—திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

ஆரணிக்கு தச்சூரில் இருந்து குடி தண்ணீர் கொண்டு வரும் திட்டம் எப்போது முடிவு அடையும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆரணி குடி நீர் அபிவிருத்தி திட்டம் டிசம்பர் 1980-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது இன்னும் மூன்று மாதங்களில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 9-40]

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக் கப்பட்டிருக்கின்றது. கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு இருக்கின்றது. குறிப்பாக ஆரணி நகரத்திலே குடிநீர் தட்டுப் பாடு ஏற்பட்டிருக்கின்றது. அங்குள்ள குடிநீர் திட்டத்தில் 20 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றும் இயந்திரம் 16—8—1980 அன்று பொருத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், 50 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றும் இயந்திரம் பொருத்தப்படவில்லை. 50 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றும் இயந்திரத்தைப் பொருத்த வேண்டும் என்பது அவசர அவசியமானது என்ற உணர்வோடு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே கூறியதுபோன்று 3 மாத காலத்தில் இதனை முடிக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோபிச் செட்டிப்பாளையம் தொகுதி ஊராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*வினா எண். 173—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோபி தொகுதியைச் சார்ந்த கலிங்கியம், அயலூர், கொளப்பலூர், சிறுவலூர், கெட்டிச்சேயூர், கோஷணம், தாழ்குனி ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கோபி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கொளப்பலூர், சிறுவலூர், அயலூர், கெட்டிசேயூர், கலிங்கியம், ஆகிய ஊர்களுக்கு கூட்டு குடிநீர்த் திட்ட மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தயாரிப்பில் இருக்கின்றன. நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கோஷணம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு தோண்டும் வேலை முடிவடைந்து ஏனைய வேலைகள் நடைபெற்று வருகின்றன. தாழ்குனி ஊராட்சி 6-வது வகையைச் சார்ந்த (நல்ல குடிநீர் ஆதாரங்கள் உள்ள சிற்றூர்) ஊராட்சியானதால் தற்போது அங்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம் இல்லை.

(ஆ) தயாரிக்கப்பட்டு வரும் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழக அரசு ஆகியவற்றின் ஒப்புதல் கிடைத்தவுடன் திட்ட நிறைவேற்றப் பணிகள் தொடங்கும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது இவ்வாறு பல ஆண்டு காலமாக பரிசீலனையில் இருந்து கொண்டிருப்பதால் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் 100 அடி ஆழம் கிணறு தோண்டினாலும் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு உடனடியாக பரிசிலித்து இந்த ஆண்டே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, விரைவில் எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

வினா எண். 174—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கடந்த ஒரு மாதமாக மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?